**செ.வெ.எண்:15** **நாள்:06.02.2019**

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் KMS 2018-19ஆம் ஆண்டில் சம்பா பருவத்தில் நடைபெறும் அறுவடையை முன்னிட்டு விவசாயிகள் பயன்பெறும் வகையில் இரண்டாம் கட்டமாக 10 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள், அரியலூர் வட்டத்தில் திருமழப்பாடி, ஏலாக்குறிச்சி, தூத்தூர், குருவாடி, ஓரியூர், காமரசவள்ளி, திருவெங்கனூர், உடையார்பாளையம் வட்டத்தில் முத்துவாஞ்சேரி மற்றும் ஸ்ரீபுரந்தான், செந்துறை வட்டத்தில் சன்னாசிநல்லூர் ஆகிய பத்து கிராமங்களில் திறப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்த நேரடி கொள்முதல் நிலையங்கள் **08.02.2019** முதல் பயன்பாட்டிற்கு வர உள்ளது. எனவே, விவசாய பெருமக்கள், அருகில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை பயன்படுத்தி பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**